# அலகு 3 அமைப்புகள்

## 3.1 ஒலிஅமைப்புகள்

**கலைச்சொற்கள்**

அமைப்பு
ஒலி
வண்ணம்

### பயணம் செய்வோம்

6EBD33

### பள்ளி செல்லும் வழியில் ...

மதி பள்ளிக்குச் செல்கிறாள். அவள் செல்லும் வழியில் பல ஒலிகளைக் கேட்கிறாள். அந்த ஒலிகளில் உள்ள அமைப்புகளைக் கேட்டு மகிழ்கிறாள். வாருங்கள் நாமும் அவளுடன் சேர்ந்து பயணித்து மகிழ்வோம்.




### ஆசிரியருக்கான குறிப்பு

- மேற்காணும் சூழலில் ஏற்படக்கூடிய ஒலிகளை வகுப்பறையில் ஒலிக்கச் செய்து நடித்துக் காண்பித்தல்.
- அன்றாட வாழ்வியல் சூழ்நிலைகளில் கேட்டு மகிழ்ந்த மற்ற ஒலிகளையும் ஒலிக்க மாணவர்களை ஊக்கப்படுத்துதல். எடுத்துக்காட்டு: பறவைகள், விலங்குகள், போக்குவரத்துச் சாதனங்கள் போன்றவற்றின் ஒலிகள்.



TN_GOVT_Maths_Tamil_Ch03_50-55.indd 50 19-12-2019 18:50:12

# நான் மகிழ்ச்சியாய் உள்ளேன்.

## கற்றல்



கைதட்டு, கைதட்டு, கைதட்டு
வீட்டில் நான் மகிழ்ச்சியாய் உள்ளேன்;
எனவே, கைதட்டு, கைதட்டு, கைதட்டு.



விரல்சொடுக்கு, விரல்சொடுக்கு, விரல்சொடுக்கு
பள்ளியில் நான் மகிழ்ச்சியாய் உள்ளேன்;
எனவே, விரல்சொடுக்கு, விரல்சொடுக்கு, விரல்சொடுக்கு.



காலால் தட்டு, காலால் தட்டு, காலால் தட்டு
வகுப்பில் நான் மகிழ்ச்சியாய் உள்ளேன்;
எனவே, காலால் தட்டு, காலால் தட்டு, காலால் தட்டு.



மேசையில் தட்டு, மேசையில் தட்டு, மேசையில் தட்டு
எங்கும் நான் மகிழ்ச்சியாய் உள்ளேன்;
எனவே, மேசையில் தட்டு, மேசையில் தட்டு,
மேசையில் தட்டு.

6EK94Q

### ஆசிரியருக்கான குறிப்பு

ஒலி எழுப்பியவாறே பாடலைப் பாடவும். மீண்டும் ஆசிரியர் பாடும்பொழுது கைதட்டு, விரல்சொடுக்கு, காலால்தட்டு, மேசையில் தட்டு போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக அவற்றிற்குரிய ஒலிகளை எழுப்பிப் பாடவும். இத்தகைய செயல் ஒலி அமைப்பினை மெருகேற்றும்.

## செய்து பார்

### கைதட்டி மகிழ்வோம்

கைதட்டி ஒலி எழுப்புவதில், கீழ்க்காணும் வரையறுத்த ஒலி அமைப்பினை ஏற்படுத்த ஆசிரியர் முனையலாம்.



1 முறை கைதட்டு – 1 முறை கைதட்டு – 1 முறை கைதட்டு,...
2 முறை கைதட்டு – 2 முறை கைதட்டு – 2 முறை கைதட்டு,...
1 முறை கைதட்டு – 1 முறை கைதட்டு – 3 முறை கைதட்டு,...
3 முறை கைதட்டு – 3 முறை கைதட்டு – 1 முறை கைதட்டு
1 முறை கைதட்டு – 1 முறை கைதட்டு ...



TN_GOVT_Maths_Tamil_Ch03_50-55.indd 51 19-12-2019 18:50:16

## முயன்று பார்



மியாவ்வும், லொள்–லொள்ளும்
நண்பர்கள்.
நீண்ட நாட்களுக்குப் பிறகு
அவை சந்தித்துக்கொள்கின்றன.
மியாவ்வும் லொள்–லொள்ளும்
எவ்வாறு பேசிக்கொள்ளும்
என்பதை நினைத்துச் செய்து பார்க்கவும்.



## செயல்பாடு

### செய்து மகிழவும்



**நோக்கம்:** ஒலி அமைப்புகளை உருவாக்குதல்

**தேவையான பொருட்கள்:** பென்சில், கரண்டி, அளவுகோல், அழிப்பான், குவளை

**செய்முறை:** மேற்காணும் பொருட்களை மேசையில் தட்டுவதால் எழும்பும் ஒலி அமைப்புகளைக் கேட்டு மகிழ்க. கீழ்க்கண்ட அமைப்புகளையும் பின்பற்றிச் செய்து பார். மேலும், சில அமைப்புகளை உருவாக்கிப் பார்.

| |  |  |  |  |  |
|---|---|---|---|---|---|
| மேசையில் தட்டுகிற எண்ணிக்கை | 1 | 1 | 1 | 1 | 1 |
| | 2 | 2 | 2 | 2 | 2 |
| | 1 | 2 | 1 | 2 | 1 |

6EU56D

ஆகா! எங்கும் ஒலி அமைப்புகள் உள்ளன.
எங்கெல்லாம் ஒலி அமைப்புகளைக் கேட்க
முடிகிறது? பகிரவும்.



# 3.2 வண்ணங்களில் அமைப்புகள்

6F4181

## பயணம் செய்வோம்

### வண்ண வண்ணத் தோட்டம்



**படத்தைப் பார்த்துப் பகிரவும்.**


- படத்தில் உள்ள மரங்களையும், செடிகளையும் பார், அவற்றில் உள்ள அமைப்பு எப்படி உள்ளது?
- சறுக்கு பலகைகளில் உள்ள வண்ணங்களின் அமைப்புகள் யாவை?
- வண்ணப் பலூன்களில் உள்ள அமைப்புப் பற்றிக் கூறவும்.
- இத்தோட்டத்தில் வேறு ஏதேனும் வண்ண அமைப்பைக் காண்கிறாயா? அவற்றைப்பற்றி உன் நண்பர்களுடன் பகிரவும்.



TN_GOVT_Maths_Tamil_Ch03_50-55.indd 53 19-12-2019 18:50:21


## கற்றல்

அமைப்பினை உற்றுநோக்கி அடையாளம் காண்.




## செய்து பார்

வண்ணமிட்டு அமைப்பைப் பூர்த்தி செய்க.



## மகிழ்ச்சி நேரம்

கீழ்க்கண்ட அமைப்பினை உற்றுநோக்கிச் சரியானவற்றை (✓) செய்க.







TN_GOVT_Maths_Tamil_Ch03_50-55.indd 54 19-12-2019 18:50:23

## செயல்பாடு

உனக்கு விருப்பமான முறையில் வண்ண அமைப்பை உருவாக்கி மகிழ்க.









TN_GOVT_Maths_Tamil_Ch03_50-55.indd 55 19-12-2019 18:50:24